தமிழ் நாடு சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1970 மார்ச் 10.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 289, 290, 291, 292 ஆகிய எண்கள் உள்ள வினாக்களெல்லாம் சேர்ந்தாற்போல் எடுத்துக் கொள்ளப்படும்.

சுகாதார நிலையங்கள்.

***289 வினா—திரு. டி. மார்டின் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மொத்தம் எத்தனை சுகாதார நிலையங்கள் உள்ளன ?

(இ) அவைகளில் 1214 சுகாதார நிலையங்களில் டாக்டர்கள் இல்லை என்பது உண்மையா ?

(உ) ஆம் எனில், டாக்டர்கள் இல்லாத குறையைப் போக்க தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) 341.

(இ) இல்லை. எல்லா சுகாதார நிலையங்களிலும் மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

***290 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதி பெருமாநல்லூரில் "ஆரம்ப சுகாதார நிலையம்" ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) திருப்பூர் தொகுதி பெருமாநல்லூரில் ஆரம்ப சுகாதார நிலையத்தை துவக்கத் தமிழக அரசு 1969 நவம்பர் மாதத்தில் ஒப்புதல் அளித்தது. 23—12—1969-ல் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. மருத்துவ அதிகாரி 1—2—1969-இல் பதவி ஏற்று பணிகள் நடைபெற்று வருகின்றன.